# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண் 01/2020** **நாள் 01.01.2020**

தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய 27 மாவட்டங்களில் இரண்டு கட்டங்களாக 2019 டிசம்பர் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

ஊரக உள்ளாட்சிகளில் மொத்தம் 91,975 பதவியிடங்களை நிரப்பிட நேரடித் தேர்தல் நடைபெற்றது. இதில், 27 மாவட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட 515 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 314 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 5,090 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 9,624 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களும் மற்றும் 76,746 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் அடங்கும்.

இதில், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களில் 18,137 பதவியிடங்களுக்கும், கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 410 பதவியிடங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 23 பதவியிடங்களுக்கும், என மொத்தம் 18,570 பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவில் 24,680 வாக்குச்சாவடிகளிலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் 25,008 வாக்குச்சாவடிகளிலும், மொத்தம் 49,688 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. 27.12.2019 அன்று நடைபெற்ற முதல் கட்ட தேர்தலில் 77.10 சதவிகித வாக்குகளும், 30.12.2019 அன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலில் 77.73 சதவிகித வாக்குகளும் பதிவாகியுள்ளன.

முதல் கட்ட தேர்தல் நடைபெற்றபொழுது ஏற்பட்ட சிறுபிரச்சினைகள் காரணமாக 30 வாக்குச்சாவடிகளில் 30.12.2019 அன்று மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இதில், 72.70 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியது. இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெற்றபொழுது ஏற்பட்ட சிறுபிரச்சினைகள் காரணமாக 9 வாக்குச்சாவடிகளில் 01.01.2020 அன்று மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 59.42 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளது.

27 மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் 02.01.2020 அன்று 315 வாக்கு எண்ணும் மையங்களில் காலை 08.00 மணிக்கு தொடங்கி நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்று அடுக்கு பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையைச் சார்ந்த 30,354 அலுவலர்கள், காவலர்கள் இப்பணியில் ஈடுபட உள்ளனர்.

அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும், வாக்குப்பெட்டிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள அறையிலிருந்து (Strong Room), வாக்குப் பெட்டிகளை வேட்பாளர்களின்

முகவர்கள் முன்னிலையில் வாக்குச் சீட்டுகளை வகைப்படுத்தி பிரிக்கும் அறைக்கு (Sorting Room) எடுத்துச் சென்று, வாக்குச் சீட்டுகளை பிரித்து, அங்கிருந்து வாக்கு எண்ணும் அறைக்கு எடுத்துச் செல்லும் வரையிலான நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்ய உரிய எண்ணிக்கையில் CC கேமராக்கள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வாக்கு எண்ணும் அறைகளில் வாக்கு எண்ணும் நடவடிக்கைகளையும் ஒளிப்பதிவு செய்ய CC கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணிக்கையில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அடையாள அட்டைகள் (பதவி வாரியாக) வழங்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணும் அலுவலர்கள் கைபேசிகளை வாக்கு எண்ணும் மையத்திற்குள் எடுத்துச் செல்ல அனுமதியில்லை.

வாக்கு எண்ணிக்கை முடிவினை **https://tnsec.tn.nic.in/** இணைய முகவரியில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய கீழ்க் குறிப்பிட்ட நடைமுறைகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் 31.12.2019 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர். இரா.பழனிசாமி,இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களால், 27 மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட கண்காணிப்பாளர்களுடன் காணொலிகாட்சி வழியாக நடைபெற்றது.

- ❖ வாக்கு எண்ணும் மையங்களில் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள்
- ❖ தேவையான அளவு வாக்கு எண்ணும் அலுவலர்களை பணியமர்த்துதல்
- ❖ வாக்கு எண்ணும் மையங்களுக்கான வேட்பாளர் முகவர்கள் நியமனம் செய்தல்
- ❖ CC கேமரா மூலம் வாக்கு எண்ணிக்கை மையங்களில் பதிவு மேற்கொள்ளுதல்
- ❖ வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- ❖ வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், பதவி ஏற்கும் நாளினை தெரியப்படுத்துதல்
- ❖ வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு மறைமுக தேர்தல் குறித்த அறிவிப்பை அளித்தல்
- ❖ வாக்கு எண்ணும் மையங்களில் நுண்பார்வையாளர்களை நியமித்தல்

இக்காணொலிக் காட்சி கலந்துரையாடலில், மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., காவல் துறை தலைவர் (தேர்தல்) திரு.ச.ந. சேஷசாய்,இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர் (தேர்தல்) திருமதி.ப.கண்ணம்மாள்,இ.கா.ப., மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வாக்குகள் எண்ணும் பணி நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

1/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்